

KNOW YOUR MEDS



# தெரிந்து கொள்ளுங்கள் பத்திரப்படுத்தி வைக்கும் முறையும் காலாவதி தேதியும்


## பெரும்பாலான மருந்துகளை அறை வெப்பநிலையில் பத்திரப்படுத்தி வைக்கலாம்

மருந்துகளை **அனலும் சூரிய ஒளியும் படாத, குளுமையான, உலர்வான இடத்தில்** பத்திரப்படுத்தி வையுங்கள்

மருந்துகளை **பிள்ளைகளுக்கு எட்டாத வகையில்** பாதுகாப்பான இடத்தில் வைத்திருங்கள்



விவரச்சீட்டில் குறிப்பிடப்பட்டிருந்தால் மட்டுமே மருந்தைக் குளிர்பதனப் பெட்டியில் வையுங்கள்




## உங்களது மருந்தை உட்கொள்வதற்கு முன், காலாவதி தேதியையும் மருந்தின் தோற்றத்தையும் சரிபாருங்கள்

பின்வரும் சூழ்நிலைகளில் மருந்தை உட்கொள்ளாதீர்கள்



**மருந்தின் பெயரும் சக்தியும்** உங்களுக்கு **உறுதியாகத் தெரியவில்லை**




மருந்து **காலாவதியாகிவிட்டது** அல்லது **அறியாத காலாவதி தேதி**



மருந்தின் **தோற்றம் மாறிவிட்டது**

## பெரும்பாலான மருந்துகளை வழக்கமான முறையில் வீசலாம்




மருந்தை வீசுவதற்கு **முன்**, அதன் விவரச்சீட்டில் உள்ள **தனிப்பட்ட விவரங்களை (பெயர், அடையாள அட்டை எண்) அகற்றிவிடுங்கள்**



**சிலவகை** மருந்துகள் **மருந்தகத்தால்** தனிப்பட்ட முறையில் வீசப்பட வேண்டும்

எடுத்துக்காட்டுகள்

- புற்றுநோய்த் தடுப்பு மருந்து
- நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்து
- கட்டுப்படுத்தப்பட்ட மருந்துகள்




இந்த மருந்துகளை அப்புறப்படுத்துவதற்கு, நீங்கள் மருந்துகள் வாங்கிய மருந்தகத்திற்கு மீண்டும் கொண்டு செல்லுங்கள்




A National Pharmacy Strategy initiative go.gov.sg/nps

In Collaboration with Pharmaceutical Society of Singapore

MINISTRY OF HEALTH SINGAPORE

Copyright © Ministry of Health, Singapore

Updated on 1 July 2024